©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 167A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூன் 7, 2011
வைகாசி 24, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011.**

***2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 22–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2010.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

“3. பள்ளிகள் பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும் :-

(1) இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியும் தமிழ்நாடு அரசிதழில் அரசினால் அறிவிக்கை செய்யப்படக் கூடியவாறு, அத்தகைய கல்வியாண்டிலிருந்து I முதல் X வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்காகவும் வாரியத்தால் குறித்துரைக்கப்படக் கூடியதான பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும். அரசானது வெவ்வேறு வகுப்புகளுக்கு வெவ்வேறு கல்வி ஆண்டுகளைக் குறித்துரைக்கலாம்.

**(2)** **(1)**–ஆம் உட்பிரிவின் படியான அறிவிக்கையானது பிறப்பிக்கப்படுவது வரையிலும் இம்மாநிலத்திலுள்ள பள்ளி ஒவ்வொன்றிற்கும் பாடத்திட்டமும் பாட நூல்களும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(a) I மற்றும் VI –ஆம் வகுப்புகளில் **2010–11** ஆம் கல்வி ஆண்டுக்கு முன்னதாக இருந்து வந்த முறையானது தொடர்தல் வேண்டும்; மற்றும்

(b) II முதல் V வரையிலான வகுப்புகளிலும், VII முதல் X வரையிலான வகுப்புகளிலும் தற்போது இருந்து வருகின்ற முறையானது தொடர்தல் வேண்டும்.".

**11–**ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**3.** முதன்மைச் சட்டத்தின் **11–**ஆம் பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

**12–**ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**4.** முதன்மைச் சட்டத்தின் **12–**ஆம் பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

**14–**ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**5.** முதன்மைச் சட்டத்தின்**14–**ஆம் பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

## நோக்க– காரண விளக்கவுரை

தமிழ்நாடு அரசானது, இம்மாநிலத்தின் பள்ளிக் கல்வியைப் பொறுத்த அளவில், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண்.8/2010) இயற்றப்படுவதில் முடிவடைந்த தொடர்புள்ள பொருட்பாடுகள் உள்ளடங்கலாக, தற்போது நிலவி வருகின்ற நிலையினையும் அதனோடு தொடர்புடைய அனைத்துத் தொடர்பான கூறுகளையும் பொறுத்த அளவில் விரிவான ஆய்வினை மேற்கொண்டுள்ளது. அரசானது, மேற்சொன்ன சட்டத்தின் செல்லுந் தன்மையை எதிர்த்த மனுக்களின் தொகுதி ஒன்றில், 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30–ஆம் தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயத்தின் தீர்ப்புரையையும் கூட கவனத்திற் கொண்டு பரிசீலனை செய்துள்ளது.

2. கவனமான ஆய்வின் பேரிலும், அனைத்துத் தொடர்பான கூறுகளையும் பரிசீலித்ததன் பேரிலும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் ஈராயமானது, நீதிப் பேராணை மனுக்களின் தொகுதி ஒன்றில் பிறப்பித்த 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30–ஆம் தேதியிட்ட தனது பொதுவான தீர்ப்புரையில் சமூக நீதி மற்றும் தரமான கல்வி வழங்குதல் என்பதான நலனில் அனைவருக்கும் பொதுவான பள்ளிக் கல்வி முறையொன்றைக் கொண்டு வருவதற்கு அரசுக்கு உள்ள அதிகாரத்தை அங்கீகரித்த போதிலும், அதே நேரத்தில், மேற்சொன்ன சட்டத்தின் ஒரு சில வகைமுறைகளைச் செல்லாததென நீக்கம் செய்துள்ளது என்பதோடு அச்சட்டத்தின் வேறு சில வகைமுறைகளைத் திருத்துவதற்காகப் பணிப்புரைகளையும் வழங்கியுள்ளது என்பதைக் காணலாம்.

3. மேலும், I மற்றும் VI–ஆம் வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தை உருவாக்குவதற்கான முடிவுகள், பதவி–வழி உறுப்பினர்களால் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளன என்பதும், மேற்சொன்ன சட்டத்தின் 5(2) எனும் பிரிவில் பட்டியிலிடப்பட்டுள்ள வாரியத்தின் பிற உறுப்பினர்கள், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டதற்கு பின்னர்தான் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதும் உயர்நீதிமன்றத்தின் ஈராயமானது, தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள ஒரு பொருட்பாடாகும் என்பதையும் காணலாம்.

4. மேலும், 2009–ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி (மையச்சட்டம் 35/2009) தொடக்க நிலைக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு நடைமுறையானது, 35/2009–எனும் எண்ணிட்ட மேற்சொன்ன மையச்சட்டத்தின் 29(2) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட அளவையைக் கருத்தில் கொண்டு, மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கப்பட வேண்டிய கல்வி அதிகார அமைப்பினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது, 3051–3056/2010 முதலான எண்களிடப்பட்ட நீதிப் பேராணை மனுக்களில் 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30–ஆம் தேதியிட்ட தனது ஆணையில், 8/2010–எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் 5(2) எனும் பிரிவின்படி, உருவாக்கப்பட்ட வாரியமானது, மேற்சொன்ன 35/2009 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்தின்படி கல்வி அதிகார அமைப்பாகப் பணியாற்றுவதற்கு, அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கப்படும் அதே வாரியமாக இருக்குமா என்பதை அரசு முடிவு செய்தல் வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

5. மேலும் 8/2010 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி அறிமுகப்படுத்தக் கருதப்பட்ட பாடத்திட்டத்தைப் பொறுத்த அளவில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடத்திட்டமானது, பல்வேறு பாடங்களில் உதாரணமாக கணக்கியல், அறிவியல் மற்றும் ஆங்கிலம் போன்றவற்றில், தரத்தையும் உள்ளடக்கத்தையும் பொறுத்த அளவில் தகுதியில் குறைபட்டதாக காணப்படுகின்றது என்பதையும், இதனால் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றான, அதாவது குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்குவது என்பதான நோக்கத்தையே தகர்ப்பதாக இது இருக்கிறது என்பதையும் காணலாம். புதிய முறையின்படி தயாரிக்கப்பட்ட புதிய பாட நூல்களை கூர்ந்தாய்வு செய்தால், அவற்றில் ஆக்கப்பூர்வமான கல்வி கற்றல் மற்றும் பாடத்திட்டத்திற்கு வெளியே கல்வி கற்றல் என்பதாக 2005–ஆம் ஆண்டு தேசீய கலைத்திட்ட வடிவமைப்பினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு, அவ்வாறு கற்பதற்கு இடமில்லை என்பதைக் காணலாம். அதன் விளைவாக இம் மாநிலத்தில் உள்ள மாணவர்களின் தகுதிப்பாடானது உயர்கல்விக்காக அவர்கள் தேசீய அளவிலான தேர்வுகளை எதிர்கொள்ளும்போது இந்நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மாணவர்களுக்குச் சமமானதாக இருக்காது.

**6.** இதைத்தவிர, திரு எம்.பி. விஜயகுமார் மற்றும் முனைவர் எஸ். முத்துக்குமரன் குழுக்களின் அறிக்கையில் கொடுக்கப்பட்ட முக்கியமான ஒருசில பரிந்துரைகள், உதாரணமாக, மாநில கல்வி வளர்ச்சி மன்றம் என்ற பெயரில் நிலையான அமைப்பு ஒன்றாகக் கருதப்படும் வகையில் ஆலோசனைக் குழுமம் ஒன்றை அமைத்துருவாக்குவது போன்ற பரிந்துரைகளுக்கு வகை செய்யப்படவில்லை. எனவே, பாடத்திட்டம் ஒன்றைத் தக்க முறைகளில் உருவாக்குவதில் உதவி செய்வதற்கான ஆலோசனை அமைப்பு எதுவுமில்லை. அவ்வாறு இருந்தால் மேற்சொன்ன இச்சட்டத்தின் நோக்கத்தை எய்துவதில், அதாவது தரமான கல்வியை வழங்குவதைப் பொறுத்த அளவில் உதவி செய்யும்.

**7.** **2010**–ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மாநிலப் பொதுப் பள்ளிக் கல்வி வாரியமானது **2009**–ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் **29**–ஆம் பிரிவிற்கிணங்கிய வகையிலான கல்வி அதிகார அமைப்பாகக் குறித்து நியமிக்கப்படவில்லை. எனவே, பொதுவான பாடத்திட்டத்தை வகுத்துரைப்பதற்கான மற்றும் பாட நூல்களை வகுத்துரைப்பத்தற்கான தகுதி வாய்ந்த நுண்ணறிவுத் தொழில் திறன் வாய்ந்த அமைப்பு எதுவுமில்லை. II ஆம் வகுப்பு முதல் V-ஆம் வகுப்பும் வரையிலும் VII ஆம் வகுப்பு முதல் X வகுப்பு வரையிலுமான வகுப்புகளுக்கு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் கொண்டு வந்துள்ள நூல்களைத் தவிர பிற வேற நூல்கள் அறிவிக்கப்படவில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்படி இது தேவையானதாகும். மேலும், சமச்சீர் கல்வி என்பது, பொதுவான பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் வகுத்துரைப்பது மட்டுமில்லாமல், அதைவிட அதிகமானவற்றை உள்ளடக்கியதாகும். ஆசிரியர்களின் தகுதிப்பாடுகள், கட்டமைப்பு வசதிகள், தேர்வுகள், ஆசிரியர்களின் நடத்தை விதித் தொகுப்பு, மாணவர்களுக்கான நடத்தைவிதிகள், முதலானவை போன்ற பல்வேறு கூறுகளை உள்ளடக்குகிற விரிவானதொரு சட்டம் ஒன்றை இயற்றுவது தொடர்பாக முனைவர் எஸ். முத்துகுமரன் குழுவினால் செய்யப்பட்ட பல்வேறு ஆலோசனைகளை, மாணவர்களின் நலனை முன்னிட்டு விரிவாக ஆய்வு செய்வது தேவையானதாகும். மாணவர்களை மதிப்பீட்டுக்கணிக்கும் முறையில் மாற்றங்கள் தேவைப்படுகிறது என அவர் வலியுறுத்தி இருக்கிறார். எனவே **8/2010** எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் **3**–ஆம் பிரிவில் கருதப்படும் சமச்சீர் கல்வித் திட்டத்தை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்கு இயலாததாக ஆகியுள்ளது. எனவே, அரசானது சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகளை வழங்கி ஆலோசனை பெறுவதற்கு குழு ஒன்றை நியமிக்கக் கருதுகிறது. மேற்சொன்னவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு **8/2010**–எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் **3**–ஆம் பிரிவைத் திருத்துவது தேவையானதாகியுள்ளது.

**8.** மேலும், இந்தச் சட்டமானது **3051–3056/2010** எனும் எண்ணிட்ட நீதிப்பேராணை மனுக்களில், உயர்நீதிமன்றம் வழங்கிய பணிப்புரைகளின்படி திருத்தப்படவில்லை. உயர்நீதிமன்றத்தின் பணிப்புரைகளின்படி இவ்வாறு திருத்தப்பப்பட வேண்டியது தேவையானதாகும். மேற்சொன்ன பணிப்புரைக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு, **8/2010** எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் **11, 12, 14,** ஆகிய பிரிவுகளை விட்டுவிடுவதும் தேவையானதாகியுள்ளது.

**9.** எனவே, மேற்சொன்னவை உள்ளிட்ட அனைத்துத் தொடர்பான பொருட்பாடுகளையும் மறு ஆய்வு செய்ததன் பேரில், அரசானது, பாடத்திட்டமும் பாடநூல்களும் இச்சட்டத்தின் நோக்கங்களை முழுவதுமாக நிறைவு செய்வதாக இல்லை எனவும், உலகமயமாக்கலின் மூலம் விடுக்கப்படும் சவால்களை எதிர்கொள்ள மாணவர்களை இயல்விப்பதாக இல்லை எனவும் கண்டறிந்துள்ளது. அரசானது, சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும், நியாயமான முறையில் சமமான வாய்ப்பு அளிக்கப்படும் வகையிலான படித்தளத்திற்கு வகை செய்வதன் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்வதற்கும் சமூக நீதியை உறுதி செய்வதற்கும், ஏற்கப்படவேண்டிய மிகவும் உகந்த முறை குறித்து விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்கு இத்துறையின் செயற்களத்தில் உள்ள வல்லுனர்களைக் கொண்ட உயர் அதிகாரக் குழு ஒன்றை நியமிக்கக் கருதுகிறது. எனவே, இந்தச் சூழ்நிலையை மறு ஆய்வு செய்வது உடனடித் தேவையாக இருக்கிறது. மேற்சொன்னவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவது தேவையானதாகியுள்ளது.

**10.** இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் கூறு **3(1)–**ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அறிவிக்கைகளை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது,

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**சி.வி. சண்முகம்,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவு சட்டமாக இயற்றப்பட்டு, அமுலுக்கு வரும் போது, மாநிலத் தொகுநிதியிலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், இந்த நிலையில், கருதப்படும் சட்டத்தின் விளைவாக ஏற்படக் கூடிய செலவினத்தை எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**சி.வி. சண்முகம்,**
*பள்ளிக் கல்வி அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.